131

உ

சிவமயம்.

ஸ்ரீ பழனியாண்டவர்

பரமசற்குரு மாலை.

வருகைப் பதிகம்.

இவை

ஸ்ரீ பழனியாண்டவர் திருவருளால்

கோயமுத்தூர் தாலூகா கோவில்பாளையம்

சோழிய வேளாளர் உபாத்தியாயர்

அனந்தகிருஷ்ண பிள்ளை குமாரர்

உபாத்தியாயர்

நஞ்சைய பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

கோயமுத்தூர் வக்கீல்

C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

கே. ஆர். வி. அண்டு கோ., அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

1912.

O26:417

M12

171036.

உ

சிவமயம்.

ஸ்ரீ பழனியாண்டவர்

பரமசற்குருமாலை.

வருகைப் பதிகம்.

இவை

ஸ்ரீ பழனியாண்டவர் திருவருளால்

கோயமுத்தூர் தாலூகா கோவில்பாளையம்

சோழிய வேளாளர் உபாத்தியாயர்

அனந்தகிருஷ்ண பிள்ளை குமாரர்

உபாத்தியாயர்

நஞ்சைய பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

கோயமுத்தூர் வக்கீல்

C. K. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று

கே. ஆர். வி. அண்டு கோ., அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றன.

1912.

இதன் விலை அணா 1.

உ

சிவமயம்.

முகவுரை.

இந்தப்பிரபந்தங்களை இயற்றினவர் கோயமுத்தூர்தாலூக்காகோவில்பாளையம் பூவைசியகுலத்தில் சோழிய வேளாளர் மரபிற்றோன்றிய உபாத்தியாயர் அனந்த கிருஷ்ணபிள்ளை குமாரன் உபாத்தியாயர் நஞ்சையபிள்ளை என்பவர் ஊழ்வினைவசத்தால் இடது உள்ளங்கையில் ஒருசிலந்திதோன்றி பருத்த வீக்கத்துடன் உள்ளங்கை புறங்கைகளில் அனேக ஆணிகளுடன் சீழ் ரத்தம் பெருகிகொண்டு மூன்று மாசக் காலம் வருத்த ஒரு ரண வயித்தியரிடம் கொண்டுபோக அவர் அறுத்து விரல்களின் அடிப்புறத்திலுள்ள நரம்புகளை துண்டித்து விட்டனர். கண்டவர் யாவரும் இக்கரத்தின் விரல்கள் பட்டுப் போகுமென்று சொல்லிய வண்ணம் நகங்களுலர்ந்து போயின, அபூர்வமாகப் பழனிப் பெருமான் திருவருளை உத்தேசித்து மீன், கோழி முதலியவைகளைச் சமைத்து மச்சக் காவடிகொண்டு செல்ல அவை பண்டையுருவாகின்ற காட்சியை நினைந்து அவர் திருவருளை நம்பியிப்பாடல்களைத் தினம் ஒரு பாடல்களாக பாடி முடிப்பதற்குள் இரண்டு தரம் சொற்பனத்தில் காட்சிதந்தருளினூர். பாடல் முடிவுபெற அவருடைய கரம் யாதொரு குற்றமுமின்றி நன்கு விளங்கின.

சாற்றுக்கவி.

கோயமுத்தூர்

வக்கீல் C. K. சுப்பிரமணிய முதலியார், B. A.,

இயற்றியது.

மெய்யார் பழனிமலை வேலவனார் மேன்மாலை
கையார் பதிகம் கழறினான்—மெய்நூல்கள்
ஓதுநஞ் சைய உபாத்தியா யன்பழனி
நாத னருள் பெறவே நன்று.

உ

சிவமயம்.

பழனியாண்டவர் துணை.

ஸ்ரீ பழனியாண்டவர்

பரமசற்குரு மாலை.

காப்பு.

வெண்பா.

திருவாருந் தென்பழனித் தேவ னருளைத்
தருமாறு செந்தமிழைச் சாற்ற—மருவார்
கரந்த மதிவேணிக் கண்ணுதலா னீன்றதுதிக்
கரந்திகழு மானையின்றாள் காப்பு.

(கற்பக விநாயகர் துதி.)

எழுசீர் விருத்தம்.

சீர்புக ழோங்கும் பழனியங் கிரிவாழ்
தேசிகன் றன்னருள் பெறவே
பேர்புக ழோங்குங் கவிஞர்முன் னடியேன்
பிதற்றிடும் புன்மொழி தனக்கிங்
கேர்புக ழோங்குங் கவசைமா நகரி
லின்புறு கிருபையி னுயர்ந்த
பார்புக ழோங்குங் கற்பகக் களிற்றின்
பதமலர் துணையெனக் காமே.

(காலாகாலீஸ்வரர் துதி.)

கால மேவிய காலத்தில் நின்றவன்
கால மேவியே காலத்தில் வென்றவன்
கால காலங் கணித்தெனைக் காப்பவன்
கால காலன் கழலிணை போற்றுவாம்.

(கருணாகரவல்லியம்மன் துதி.)

நித்தியா னந்தமாய் நின்மலசொ ரூபமாய்
நிற்குண விசேஷமாகி
நிகழ்கின்ற பலகோடி யண்டங்கள் யாவையும்
நிரைநிரை யாய்வகுத்துச்
சுத்தமிகு மைம்பூத வுடலுறு சராசரத்
தோற்றங்கள் தனைவகுத்துத்
தூயநெறி நியமங்கள் வழுவாது காக்கின்ற
சுதந்தரர்க் கருள்வகுத்து
சித்தமல மற்றதவ யோகியர்க ளறிவினிற்
றெரிவிக்கும் ஞானவொளியாய்த்
திகழாதி பழமறைப் பொருளாய் விளங்குமொரு
தேவியே கவசைநகர்வாழ்
முத்திமுத லாகுமெங் காலகா லீசர்பால்
முயங்கு கருணாகரத்தாயே.
முந்தையூழ் வினையற வடியனுக் கருளுவாய்
முதல்வியே முக்கணுமையே

(சுப்பிரமணியர் துதி.)

கலித்துறை.

மறமே புரியு மசுரரை வீட்டியம் மாதவர்க்கிங்
கறமே திரியுநல் வாழ்வளித் தேயகி லம்புகழுந்
நெறியே தருந்தெய்வ குஞ்சரம் வள்ளியும் நேச
[மூறப்
பொறையே யுருவாய்க் கவசையில் வாழ்குக
[புண்ணியனே

(கரிவரதராஜப்பெருமாள் துதி.)

ஆசிரிய விருத்தம்.

சதுர்மறைக் கிழவனைத் திருவுந்தி
மலரினிற் சனித்திடத் தந்தவனு நீ
சகலபுவ னங்களையு முண்டுமிழ்ந்
திலங்கிடத் தனதருள் புரிந்தவனுநீ
கதிர்மணித் தூணிடைக் கோரநர
சியமாய்க் கனகனை வதைத்தவனுநீ
காசினியை யோரடி யளந்துமா வலிகர்வங்
கைக்கொண்டு நின்றவனுநீ
எதிர்பொருத தசமுகன் சிரங்களை
வாளியி னிரையாக வென்றவனுநீ
ஏகனே காவெனுந் தோகைதிரௌ
பதிமான மிரக்ஷித்தபரனுநீயே
கதிர்மதி புகழ்கின்ற கவசைநகர்
மேவிய கரிவரத ராஜனென்னும்
காரணப் பெயர்கொண்ட வாரண
நாரண காத்தருள் செய்குவாயே.

(கவய காளியம்மன் துதி.)

கலிநிலைத்துறை.

மண்டு தீயென முனிந்தமர் நாடிய மயிடன்
சண்ட னார்புகச் சுரிகையிற் றடிந்துதாள் வலத்தாற்
கொண்ட வெற்றியை மகிழ்ந்துமை புகழ்ந்தகோ
[மளமே
அண்ட மேபுகழ் கவசைவாழ் காளியே யருள்வாய்

நூல்.

கங்கைவே ணியன்கைச் செங்கனி விரும்பிக்
காசினி வலமதாய் வந்த
கொங்கலர் கடப்பந் தார்புனைந் திலங்குங்
குமரனே யமரர்நா யகனே
சங்கையுற் றலருங் குழவிமுன் முய்போற்
றமியனை யாதரித் தருள்வாய்
செங்கண்மான் மருகா பழனியங் கிரிவாழ்
தேசிகா பரமசற் குருவே (1)

பாலுட னீரும் பூவுட னாரும்
பற்றியே தகமையுற் றதினல்
ஆலமு மமுதா யுண்டவெம் பெருமா
னருளிய குமரநின் றனிப்பேர்
சாலவே யமைந்த கொள்கையாற் கவியின்
றவறினை விகழ்வரோ சான்றோர்
ஞாலமே புகழும் வேலவா பழனி
நாயகா பரமசற் குருவே (2)

ஆதியாய் நடுவாய் முடிவுமா யகன்ற
வனாதியாம் பரம்பொரு ளான
சோதியே யுந்தன் செயலினை விரித்துச்
சொல்பெரு மாண்பினை யறியாப்
பேதையே னுளத்தி னிருடனை யகற்றிப்
பெட்புறு மறிவுற வருள்வாய்
நீதியே பழனி மலைமிசை யமர்ந்த
நிமலனே பரமசற் குருவே (3)

செய்யநாண் மலர்போற் றிருமுகத் தழகுந்
திகழொளி நயனமுந் துலங்கத்
துய்யமுப் புரிநூல் மார்புறச் செவியிற்
றுலங்குகுண் டலங்களு மலுங்கக்
கையினிற் றண்டு மணியுட னீறுங்
கவினுறக் காட்சியே தருவாய்
வையகம் புகழும் பழனியங் கிரிவாழ்
வள்ளலே பரமசற் குருவே (4)

அண்டர்நா யகனே யசுரரைச் செற்ற
வாரணா பூரணப் பொருளே
தொண்டனே னுலகிற் றொல்வினை யடர்ந்து
துணியுறு தருள்செய வருவாய்
விண்டுவா னிரவி மலர்மகள் போற்ற
விளங்கிய வமலநா யகனே
பண்டுதான் மறைகள் தேடிய பழனிப்
பண்டிதா பரமசற் குருவே (5)

வளர்கலை நிறைந்த மதிமுக மாறு
    மருவிலாப் பன்னிரு புயமும்
இளநகை மாதர் வள்ளிதெய் வானை
    யிலங்கப்பொன் னுடையுந் துலங்க
வளமலிந் திலங்கு மயின்மிசை யேறி
    வந்திடர் களைந்திட வருவாய்
தளிர்மலர்ச் சோலை சூழ்ந்திடும் பழனி
    நாயகா பரமசற் குருவே (6)

வண்டணி துளப மாயவன் மருகா
    மருவுமூழ் வினையினுன் மெலிந்து
கொண்டுள முருகத் தினந்தினம் வருத்துங்
    கொடியவெம் பிணிதனை யகற்ற
விண்டல மதிர நடித்திடு மயின்மேல்
    விரைவினி லேறியே வருவாய்
பண்டிதா பழனி மலைதனில் வாழும்
    பரமனே பரமசற் குருவே (7)

பொறிபுலன் களைந்த மவுன யோகியர்கள்
    பொருந்திய ஞானமெய்ப் பொருளே
சிறியனேன் மிகவும் வாதையான் மெலிந்துன்
    றிருவருள் தஞ்சமென் றடைந்தேன்
அறந்திகழ் குகனே சரஹண பவனே
    ஐந்தொழிற் கிறைவனே காப்பாய்
நறுமலர்ப் பொய்கை சூழ்ந்திடும் பழனி
    நாயகா பரமசற் குருவே (8)

வானநாட் டரசு மிமையவர் முதலோர்
        மருகிட வன்சிறை வைத்த
தானவர் குலத்தை வேருடன் களைந்த
        சத்திவேல் வித்தகா வடியேன்
கானவர் வலையின் மானெனக் கலங்கிக்
        கதறிடும் வாதையைத் தவிர்ப்பாய்
ஞானிகள் போற்றும் பழனியங் கிரிவாழ்
        நாதனே பரமசற் குருவே (9)

நம்பனம் பிகையுந் திருமறை வாக்கால்
        நாமமே பழநியென் றுரைத்தார்
உம்பர்மா முனிவர் விபுதர்மா னிடரு
        முறைப்படி போற்றிட வுவக்கு
மெம்பெரு மானே நம்பனே னுனையெ
        னிடர்ப்பிணி யொருவிட வருள்வாய்
செம்பது மத்தாள் மருகனே பழனித்
        தேவனே பரமசற் குருவே (10)

வானவர்க் கினிய தேனமர் தருவே
        மாகிலாத் தீஞ்சுவை யமுதே
ஞானமெய்ப் பொருளே யடியவர்க் கருளும்
        நாதனே சரஹண பவனே
சேனைநாள் மிகவும் வாதையான் மெலிந்த
        சேயனுக் கருள்தர வருவாய்
கானமர் புட்பச் சோலைசூழ் பழனிக்
        காரண பரமசற் குருவே (11)

வெந்தொழி லவுண னுரமொடு கிரியும்
வேரறத் துளைத்தவேன் முருகா
சந்தத முனது திருமல ரடியைத்
தஞ்சமாய் நெஞ்சகத் தமைத்த
மைந்தன்வெந் துயரில் வாதையுற் றலா
மர்மமா யிருப்பது முறையோ
எந்தையே பழனி மலைதனில் வாழு
மிறைவனே பரமசற் குருவே (12)

மெத்தவு முனது பதமலர் நாளும்
விதிமுறை பூசனை யியற்றும்
பத்தியு மிலனாய்ப் புத்தியிற் றெளியாப்
பாலனு யுழல்வது முறையோ
அத்தனார்க் கினிய புத்திரா வுந்த
னடைக்கலம் வாதையைத் தவிர்ப்பாய்
சித்தர்கள் போற்றும் பழனியங் கிரிவாழ்
தேசிகா பரமசற் குருவே (13)

துங்கபங் கயத்தோன் றெளிவுறு மூலச்
சுயம்பெரு மாண்பினை யுரைத்த
செங்கைவே லவனே வள்ளிநா யகியாள்
தேடிய வசந்தனே யடியேன்
கங்குலும் பகலும் வாதையாற் கூவிக்
கதறிடு முறைசெவிக் கிலையோ
பொங்குநீர்ப் பொய்கை சூழ்ந்திடும் பழனிப்
புண்ணியா பரமசற் குருவே (14)

ஓதுநால் வேதம் சுருதியா கமங்க
ளுரைத்திடும் புராணங்க ளுடனே
நீதியைம் பூதம் நால்வகைப் பிறவி
நிகழெழு தோற்றமாய் நிறைந்த
சோதியே யுந்தன் திருவருட் கடாக்ஷம்
துலங்கிடத் தந்தருள் புரிவாய்
நீதியே பழனி மலைமிசை யமர்ந்த
நிமலனே பரமசற் குருவே (15)

சத்தியாய்ச் சிவமா யுற்றபொற் கிரிவாழ்
தயாபரா சத்திவேல் முருகா
இத்தனை போதும் வறுமையேன் வாதை
யிடருற்றேன் முடிவிலா நீண்டுச்
சித்தமா யுந்தன் மலரடி நம்புஞ்
சேயெனக் கருடர வருவாய்
பத்தர்கள் போற்றும் பழனியங் கிரிவாழ்
பரமனே பரமசற் குருவே (16)

எழிலுறு மிடும்ப னிருவினை யொருவ
வினையிலாக் காட்சியே தந்த
அழகுறுங் கதிர்வேற் குமரனே யடியார்க்
கருள்தருங் கிருபையின் கடலே
பழவினைத் தொடரைப் பற்றறக் களைந்துன்
பண்புறு சேவையே தருவாய்
பழமுதிர் சோலை யெனமகிழ் பழனிப்
பண்ணவா பரமசற் குருவே (17)

இலக்கிய நன்னூல் முறைப்படி பஞ்ச
விலட்சணப் பண்களை யியற்றி
நலத்தினி லுயருன் பெட்பினைப் போற்றி
நாடுநின் னடியர்கள் போல
அலக்கணுற் றெளியே னிசைத்தசொல் குழவி
யழுதிடு மழலையென் றருள்வாய்
தலத்துயர் பழனி மலைதனில் வாழுஞ்
சண்முகா பரமசற் குருவே (18)

எண்ணருங் கோடி யண்டமாய்ப் புவன
மிலங்கிட நிறைந்துட லுயிராய்ப்
பெண்ணுட னாணு யலியுமாய் விளங்கும்
பெட்புறும் வேதமெய்ப் பொருளே
நண்ணிநின் மலர்த்தாள் தஞ்சமென் றுகந்த
நாயினேற் கருடா வருவாய்
விண்ணவர் போற்றும் பழனியங் கிரிவாழ்
வேந்தனே பரமசற் குருவே (19)

ஆலமு நடுங்க வடவையை நிகர்த்த
வசுரரைக் கிளையொடும் வீட்டி
மேலவர் பதமும் புரந்தர னரசும்
விளங்கிடத் தந்தரு ளுவந்த
சீலனே தமியே னிடர்ப்பிணி யொருவத்
தீர்ப்பது முனதருட் கரிதோ
ஞாலம்விண் புகழும் பழனியங் கிரிவாழ்
நாதனே பரமசற் குருவே (20)

வளநலஞ் சிறந்த வுலகமு மதனை
மருவிய தோற்றங்கள் பலவும்
உளமகிழ்ந் திலங்க வளித்தழித் தருளு
முத்தமா சத்திவே லரசே
இளநகை தோன்ற மயின்மிசை வந்து
னிணையிலாக் காட்சியே தருவாய்
தளிர்மலர்ச் சோலை நதிதிகழ் பழனிச்
சண்முகா பரமசற் குருவே (21)

தவநல மியற்றி யீன்றதாய் வருந்தத்
தவறுறுங் குழவியே யெனினும்
பவமுறு தீமை யணுகிடா வண்ணம்
பரிந்தமு தூட்டுவ ளதுபோற்
குவவுதோட் கதிர்வேற் குமரனே யடியேன்
குறையெலாஞ் சகித்தினி தருள்வாய்
அவமெலா மகற்றும் பழனியங் கிரிவாழ்
அண்ணலே பரமசற் குருவே (22)

நண்ணுமிந் திரிய மும்மலங் களைந்த
நற்றவ யோகியர் ஞானக்
கண்ணகங் களிக்கச் சுயஞ்சுட ரொளியாய்க்
காட்சி தந்தருளுநின் பெருமை
எண்ணுதற் கெளிதோ வெளியனுற் றரமோ
வேழையேற் கிரங்குவ தென்றே
தண்ணரு மலர்க்கா விலங்கிய பழனிச்
சண்முகா பரமசற் குருவே (23)

நித்தமு முனது பதமலர்த் துணையை
நேசமாய் நெஞ்சகத் திருத்தும்
புத்தியும் சிறந்த பத்தியும் விளங்கப்
புன்மைசேர் வினையெலா மகலச்
சித்தமா யுந்தன் றிருவருட் கடாக்ஷஞ்
செய்தெனை யாட்கொள வருவாய்
அத்தனே பழனி மலைதனில் வாழு
மண்ணலே பரமசற் குருவே (24)

அம்புவிக் குழகு மானிடப் பிறவி
யரிதரி ததனையே யடைந்தும்
நம்புமெய்ஞ் ஞானங் கல்விசற் குணமும்
நலங்கிளர் புகழொன்று மிலனாய்
வெம்பியே திரிந்த நாயினேற் குந்தன்
விதரண போதம்வந் துறுமோ
அம்பிகை யருளுந் தனயனே பழனி
யண்ணலே பரமசற் குருவே (25)

நீங்கிட வறுமை யகன்றிடத் துயரம்
நினைந்திடு பவமெலா மொருவத்
தூங்கிடப் பகைஞ ரடுபில்லி சூனி
தொலைந்திடப் பிணியெலா மகல
ஓங்கிடு முந்தன் கடாக்ஷம் நினைவி
லுற்றுநீ றணிந்திட வருள்வாய்
தீங்கிட ரகற்றும் பழனியங் கிரிவாழ்
தேசிகா பரமசற் குருவே (26)

அருளுநின் கிரியில் வண்டின மிசைப்ப
வன்புறு கிள்ளையும் பூவை
மருவுமின் சுவையி னமுதெனப் பாட
மயூரங்கள் சதிகொண்டு நடிப்ப
மருமலர்ச் சோலை பல்களிப் பரிசும்
வழங்கிய வியப்புறுங் களிப்பாற்
திருவரு ளடியேற் கில்லையோ பழனிச்
சேவகா பரமசற் குருவே (27)

மெய்யெனு மாய வாழ்க்கையும் பெய்யாய்
மேதினி விடுத்திடக் காலன்
கையினிற் பாசத் துடனெதி ரார்த்துக்
கடுகியே பிணித்திட வருமுன்
மையறுந் தோகைத் தேர்மிசை வந்து
மறித்தெனை யாட்கொள வருவாய்
அய்யனே பழனி மலைதனில் வாழு
மத்தனே பரமசற் குருவே (28)

வடிவிசைந் தொளிரு மானிட ஜனன
மருவியே மாய்கையின் வசத்தாற்
படிமிசை யலைந்து நொந்துநின் மலர்த்தாள்
பற்றிலே னதுவுநின் செயலே
அடியனுக் கருளா திருப்பது நீதி
யன்றெனை யாண்டருள் புரிவாய்
கடிமலர் நிறைந்த பழனியங் கிரிவாழ்
காரண பரமசற் குருவே (29)

தாவிய தரங்கச் சலதியை நுகர்ந்த
தமிழ்முனி பூசனைக் குவந்து
மேவிய வரங்கள் சடாக்ஷர போதம்
விளங்கிடத் தந்தருள் விமலா
பாவியே னுளத்தின் மாயையைக் களைந்து
பரிந்துமெய்ஞ் ஞானமே தருவாய்
சேவலின் கொடியாய் பழனியங் கிரிவாழ்
தேசிகா பரமசற் குருவே (30)

அருள்மிகு வேத மயன்முதற் றேவ
ரறிந்திலர் நின்பெருஞ் செயலை
மருளுறும் பாச பந்தத்தி னாழ்ந்த
வறியனே னுணர்ந்திட வசமோ
அருவினை முழுது மொருவ வீடருளு
மைங்கரர்க் கிளையவேன் முருகா
பொருண்மிகு கிருபைப் பழனியங் கிரிவாழ்
புண்ணியா பரமசற் குருவே (31)

குருமுனி சொன்ன சடாக்ஷர மகிமை
குறித்தவோ ரெழுத்தினின் வீடு
மருவுமென் றுரைத்தான் வாய்மையே யுளத்தின்
மலமறச் சந்தத நாவிற்
திருமகள் கொழுனன் மருகனா றெழுத்துஞ்
செப்புவர் பெற்றிடும் பேற்றி
னருமையா னுரைக்க முடியுமோ பழனி
யண்ணலே பரமசற் குருவே (32)

உ

சிவமயம்.

ஸ்ரீ பழனியாண்டவர்

வருகைப் பதிகம்.

காப்பு.

வெண்பா.

திருவாவி னன்குடிவாழ் செவ்வே ளருட்பா
வொருவா தனுதினமு மோதக்—குருவாகி
வந்துதவுந் தந்தி மலர்ந்த வரவிந்தமாங்
கந்தமிகு மந்தபதங் காப்பு.

நூல்.

திருவாறு முகமோ ருருவாய் விளங்கச்
சிவநேச முற்ற செயலா
லுருவாகி வேத னறியாத சூழ்ச்சி
யரனார்க் குரைத்த குருவே
கருவாகி வந்து மருளுடலைந்த
கலிதீரப் பழனி முருகா
மருவார்பைந் தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (1)

வடிவே சிறந்த முகமா றிலங்க
மகிழ்பன் னிரண்டு புயமும்
துடியே மருங்கின் கொடியான தெய்வம்
பிடியோடு வள்ளி தொடரா
வடிவே லெடுத்தென் னிடர்தீரப் பழனி
மலைநின் றெழுந்த முருகா
மடமேவு தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (2)

கதிர்வீசு ரத்ன முடியோடு பூண்க
ளணியோடு காவி யுடையும்
மதிவாச நீறு மணிநூலுந் தண்டு
மழுகோட மைந்த வுருவாய்
துதிபேசு மெந்த னெதிராய்ப் பழனித்
துரையே நின்காக்ஷி யருள
மதிநேசத் தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (3)

வாசங்கலந்த குழன் மாதர் மாய
வலையா லுழன்றென் னறிவு
பாசஞ் செறிந்த விருளேக ஞானம்
பரிவாகக் கிருபை யருள
நேசந் துலங்கி யிமையோர் களிப்ப
நெறிதந்த பழனி முருகா
மாசுங் காந்த மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (4)

துஞ்சா வரங்க ளுரமேவு சூரர்
துணையோடு மண்ணின் மடிய
அஞ்சாது சத்தி வடிவேல் தொடுத்த
வரசேயுன் னாம மறவேன்
பஞ்சாய் வருத்துங் கலிதீரப் பழனி
பதிமே லுகந்த குகனே
மஞ்சார்பைந் தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (5)

மெய்யாக நம்பு மடியார்கள் கன்ம
வினைதீர வருள்செய் விமலா
பொய்யான காய மழியாத முன்னம்
புகழ்பெற்ற ஞான மருள்வாய்
செய்யாள் தனக்கு மருகா பழனித்
தேவா நினைத்தவுடனே
மையார் பைந்தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (6)

வேலுங் கழிந்த விழிமாத ரின்ப
விழைவான் மெலிந்த வினையேன்
காலமளந்து கழியாமுன் காலனணு
காமுன் கருணை பெறவே
ஞாலங்கிளர்ந்த பழனிக் குகந்த நாதா
நின் போத மருளே
மாலும்புகழ்ந்த மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (7)

ஓயாமலுந்தன் பாதார மலரை
யுள்ளத் திருத்தி யுலகில்
வாயார வுற்ற திருநாம மோதி
மகிழ்வுற்றிருக்க வசமாய்
நாயேன் றனக்குன் னருளீந்து
நவைதீரப் பழனி முருகா
மாயாத தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (8)

மண்ணாகி விண்ணு மழையாகி வாயு
வனலாகி மற்றுஞ் செயலாய்
எண்ணாதகோடி யுடலாகி யுடலி னுயிரா
யிலங்கி யெழில்சேர்
பண்ணாகும் வேத முடிவாய் விளங்கும்
பரமா பழனிக் குமரா
மண்ணோடர் போற்று மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (9)

வண்டார் கடப்ப மலர் சூடிப்பழனி
மலைமே லமர்ந்த குமரா
சண்டாளப் பேய்க ளடுபில்லி சூனி
தமியேனை யணுக வருமுன்
பண்டாள மந்த்ர செபமோதி நீறு
பரிவாயெடுத்து வுடனே
வண்டேகு தோகை மயின்மீது நித்தம்
வரவேணு மெந்த னருகே (10)